உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை! கழக முதன்மைச் செயலாளர்

முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு இல்ல திருமண விழா!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

சென்னை, நவ. 13-

கழக முதன்மைச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே.என். நேரு எம்.எல்.ஏ. அவர்களின் சகோதரர் என்.ரவிச்சந்திரன் - சங்கரி ரவிச்சந்திரன் ஆகியோரின் புதல்வர் விஷால் நாராயண் - பெங்களூரு ஜெகதீஷ் பாட்டில் - திருமதி அனுபமா ஜெகதீஷ் பாட்டில் ஆகியோரின் புதல்வி ரிஷா பாட்டில் ஆகியோரின் திருமண விழா 16.11.2026 திங்கள்கிழமை காலை 9.15 மணியளவில் சென்னை நீலாங்கரை கிழக்குக் கடற்கரை சாலையில் அமைந்துள்ள ஆர்.கே. கன்வென்ஷன் சென்டரில் நடைபெறுகிறது.

முன்னதாக 15.11.2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் மணவிழா வரவேற்பு நடைபெறுகிறது.

இம்மண விழாவிற்கு கழகத் தலைவர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மணவிழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரையாற்றுகிறார்.

மண விழாவிற்கு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் ஆர்.டி.ஆர் பாலு எம்.பி., கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் ஆர்க்காடு நா. வீராசாமி, கழக துணைப் பொது செயலாளர்கள் ஜ.பெரியசாமி எம்.எல்.ஏ., கனிமொழி ராசாத்தி கருணாநிதி எம்.பி., ஆ.ராசா எம்.பி., க.பொன்முடி, திருச்சி என். சிவா எம்.பி., அந்தியூர் செல்வராஜ், வெள்ளகோவில் சாமிநாதன், முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ.,

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ.,

மற்றும் ஆலத்தூர் என்.கிருஷ்ண மூர்த்தி, அருண் நேரு எம்.பி., சீ.கதிரவன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மணவிழாவில், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், இரா.ஆவுடையப்பன் மு.அப்பாவு, சு. முத்துசாமி, எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., கு.பிச்சாண்டி, துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., கே.ஆர்.பெரிய கருப்பன், தா.மோ. அன்பரசன், பி.கீதாஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் எம்.எல்.ஏ., அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆர்.காந்தி, மா.சுப்பிரமணியன், பி.மூர்த்தி, எஸ்.எஸ்.சிவசங்கர் எம்.எல்.ஏ., பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., சிவ.வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ.,

திருச்சி மேயர் மு.அன்பழகன், குத்தாலம் பி.கல்யாணம், செ. ராமலிங்கம், கோவி செழியன் எம்.எல்.ஏ., சி.வி.கணேசன் எம்.எல்.ஏ., ஆர்.வைத்திலிங்கம் எம்.எல்.ஏ., ஆவடி சா.மு.நாசர், டி.ஆர். பி.ராஜா, மருத்துவர் மதிவேந்தன், இரா.ராஜேந்திரன், கயல் விழி செல்வராஜ், பெ.பழனியப்பன்,

பாண்டிச்சேரி சிவா, வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., வி.ஜி. ராஜேந்திரன், அன்னியூர் சிவா, காடுவெட்டி என்.தியாகராஜன், க.வைரமணி, வி.ஜெகதீசன், ஏ.கே. எஸ்.விஜயன், செளந்தர பாண்டியன், செ.ஸ்டாலின் குமார், மு.பழனியாண்டி, கா. ராமச்சந்திரன்,

செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மனோ தங்கராஜ், பி.வில்சன் எம்.பி., என். ஆர்.இளங்கோ, கே.என்.சேகரன், அன்பில் பெரியசாமி, எஸ்.இனிகோ இருதயராஜ், ப.அப்துல் சமது, பா. பரணி குமார் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

இம்மணவிழாவில் நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், சட்ட மன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

கழக முதன்மைச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு எம்.எல்.ஏ. நன்றி உரையாற்றுகிறார்.



கழக இளைஞர் அணியின் மண்டலம்-1-க்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று முன்தினம் (11.11.2026) அன்பகத்தில், துணைச் செயலாளர் ஜோயல் தலைமையில் நடைபெற்றது. கழக இளைஞர் அணிச் செயலாளர் - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை, எளிய மக்களுக்கு பயனுள்ள வகையில் கொண்டாடுவது குறித்தும், எதிர்வரவுள்ள இடைத்தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மேலும், இந்தக் கூட்டத்தில் கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.கருணா பங்கேற்று, சமூக வலைதளத்தை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவது குறித்து ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில், சென்னை மண்டலத்திற்கு உட்பட்ட இளைஞர் அணி, மாவட்ட அமைப்பாளர்கள் ஜே.ஜே.எபினேசர், ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, ராஜா அன்பழகன், ப.பிரகாஷ், ஆர்.டி.மதன் குமார், வானவில் விஜய் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

மாவட்ட ஆட்சியருக்கு த.வெ.க. எம்.எல்.ஏ. ஆபாச குறுஞ்செய்தி!

காணவில்லையே! எங்கே போனீர்கள்?

த.வெ.க.வினருக்கு தி.மு.க. மகளிர் அணி சமூக வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, நவ.13-

பெண் மாவட்ட ஆட்சியரிடமே ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய த.வெ.க. எம்.எல்.ஏ. ஒருவர் பற்றி வாய் திறக்காமல் எங்கே காணாமல் போனீர்கள் என்று த.வெ.க.வினருக்கு, குறிப்பாக பெண் அமைச்சர்கள் மற்றும் பெண் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கழக மகளிர் அணி கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக வெளியான சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு பெண் கவுன்சிலர் உங்கள் தலைவரை விமர்சித்துப் பேசியபோது, ஏதோ அவர் கொடுங்குற்றம் செய்தது போலக் கொந்தளித்தீர்களே... இப்போது உங்கள் கட்சி எம்.எல்.ஏ.



ஒரு பெண் அதிகாரியை அதுவும் ஒரு மாவட்ட ஆட்சியரிடமே ஆபாசமாக நடந்துகொண்டுள்ளார். இப்போது உங்கள் வாய்களை Fevikwik போட்டு ஒட்டிக் கொண்டுள்ளீர்களா?

Instagram Paid Influencerகளை போல தினம் ரீல்ஸ் போட்டுக் கொண்டு உங்கள் இருப்பைக் காட்டிக் கொண்டிருக்கும் சுயமற்ற நீங்கள், அந்த மாவட்ட ஆட்சியருக்காக குரல் கொடுத்தால் தான் ஆச்சரியம்.

உங்கள் Narcissistic தலைவரின் பிம்பத்துக்குச் சின்னக் கீறல் விழுந்தாலே 'பெண்களைக் குறிவைக்கிறார்கள்' என்று குரல் கொடுக்கிறீர்களே, ஒரு பெண் அதிகாரிக்காகக் குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில் மட்டும் எங்கே போனீர்கள்?

இவ்வாறு பதிவிடப்பட்டுள்ளது.

கோவை பெரியார் அறிவுலகத்துக்கு புத்தகங்கள் கொள்முதல்:

லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிய உத்தரவிட வேண்டும்!

சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சட்டப்பிரிவு இணைச் செயலாளர் இ.பரந்தாமன் மனு!

சென்னை, நவ. 13-

கோவை பெரியார் அறிவுலகத்துக்கு புத்தகங்கள் கொள்முதல் முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரிக்க லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிடக் கோரி தி.மு.க. சட்டப் பிரிவு இணைச் செயலாளர் பரந்தாமன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

தி.மு.க. சட்டப்பிரிவு இணைச் செயலாளர் இ.பரந்தாமன் சார்பில் வழக்கறிஞர் தாமோதரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், கோவை பெரியார் அறிவுலகத்துக்கு 50 கோடி ரூபாய் புத்தகங்கள் கொள்முதல் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த பெரியார் அறிவுலகம் கடந்த அக்டோபர் 16ம் தேதி துவக்கி வைக்கப்பட்டது. புத்தகங்கள் பரிந்துரைக்காக 117 பேர் அடங்கிய புத்தக பரிந்துரைக் குழு



அமைத்து கடந்த 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் உத்தரவிடப்பட்டது. அகல் விளக்கு மற்றும் பீனிக்ஸ் பதிப்பகங்களில் இருந்து அதிக எண்ணிக்கையில் ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ன.

மோனிகா ரவி என்ற ஒரே எழுத்தாளரிடம் இருந்து 6 மாதங்களில் 162 புத்தகங்களும், லட்சுமி மோகன், தாமரை பன்னீர், தாமரை முரளி, ஜோதி ஹரிஹரன் ஆகிய எழுத்தாளர்களின் நூற்றுக்கணக்கானப் புத்தகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இந்த பெயரில் எழுத்தாளர்கள் இருக்கின்றனரா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இந்தப் புத்தகங்கள் கொள்முதல் செய்வது தொடர்பாக கடந்த பிப்ரவரி மாதம் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

புத்தக பரிந்துரைக் குழுவில் உறுப்பினராக இருந்த பெருமாள் முருகன், அகல் விளக்கு பதிப்பகத்தில் இருந்து 1800 புத்தகங்கள் பெரியார் அறிவுலகத்துக்கு வாங்கப்பட்டிருப்பதை அம்பலப்படுத்தினார். பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், இந்த புத்தக கொள்முதல் ஊழல் குறித்து கண்டனங்களைப் பதிவு செய்தனர்.

இந்த புத்தக கொள்முதலில், பெரிய அளவில் முறைகேடுகள் நடந்துள்ளது குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரிக்க வேண்டும் என கடந்த 7ம் தேதி நான் லஞ்ச ஒழிப்புத்துறைக்கு புகார் அளித்தேன். ஆனால், இதுவரை எந்தவொரு குற்ற வழக்கும் பதிவு செய்யப் படவில்லை. அரசு நியமித்துள்ள நிர்வாக ரீதியிலான விசாரணைக் குழு போதுமானதாக இல்லை. எந்த வொரு விசாரணையும் நடத்தாமல் முந்தைய அரசு மீது குற்றம்சாட்டுவதால் இந்த விவகாரத்தில் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

பெரியார் அறிவுலகத்துக்கு புத்தகங்கள் கொள்முதல் தொடர்பான கோப்புகளை பறிமுதல் செய்து பத்திரப்படுத்த லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிட வேண்டும். எனது புகார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளார். இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.


திருத்தணி பழைய பேருந்து நிலையத்தில் பெண் பயணியிடம் 4 பவுன் நகை திருட்டு!

திருத்தணி,நவ.13

திருத்தணி பழைய பேருந்து நிலையத்தில் பெண் பயணியிடம் 4 பவுன் நகை நூதன முறையில் திருடிய சம்பவம் பயணிகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அருகே ராஜபாளையம் கிராமத்தைச் சேர்ந்த ராம மூர்த்தி என்பவரின் மனைவி நாகராணி(54). அவர் திருத்தணி அருகே தலையாரிதாங்கல் கிராமத்தில் வசிக்கும் அவரது மகள் லட்சுமிக்கு தீபாவளி சீர்வரிசை கொடுப்பதற்கு நேற்று முன்தினம் திருத்தணி பழைய பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்திருந்தார். சோளிங்கர் செல்லும் அரசு பேருந்தில் கூட்டத்து டன் கூட்டமாக பேருந்தில் ஏறி பயணம் செய்த போது அவர் கையில் வைத்திருந்த பலகாரம் கட்ட பையை பார்த்தபோது அதில் வைத்திருந்த 4 பவுன் நகை நூதன முறையில் திருடப் பட்டது பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

அதே நேரத்தில் அவருடன் பேசிக் கொண்டு பேருந்தில் ஏறிய பெண்களும் இல்லாததால், நூதன முறையில் நகைகள் பெண்கள் திருடிச் சென்றிருக்கலாம் என்று தெரிகிறது. நகைகள் இழந்த பெண் புகாரின் பேரில் திருத்தணி போலீசார் வழக்குப்பதிவு செய்து திருத்தணி பழைய பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள் ஆய்வு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். பேருந்து நிலையத்தில் பெண் பயணியிடம் நூதன முறையில் நகை திருட்டு சம்பவம் சக பயணிகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியது.



இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் முத்துமணிகண்டன் - ஆர்த்தி ஆகியோர் திருமணத்தை தி.மு.கழக தலைமை நிலைய செயலாளர் பூச்சி முருகன் தலைமை ஏற்று நடத்தி வைத்தார். உடன் முன்னாள் அரசு வழக்கறிஞர் கார்த்திகேயன், சேர்மன் முக்தார், ராஜாராம் மற்றும் பழங்காநத்தம் பகுதிச் செயலாளர் சுதன், பெருநாழி சசிகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

த.வெ.க. எம்.எல்.ஏ.வின் அநாகரிகப் போக்கு:

மதுபோதையில் பெண் கலெக்டர் இல்லத்திற்கே சென்று அச்சுறுத்துவதா?

கழக மகளிர் அணி கண்டனம்!

சென்னை, நவ. 13-

மாவட்ட பெண் ஆட்சியருக்கே பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கும் த.வெ.க. எம்.எல்.ஏ.வின் அநாகரிகப் போக்கிற்குத் தி.மு.க. மகளிரணி சார்பில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்ட பெண் ஆட்சியருக்குத் தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) சட்டமன்ற உறுப்பினர் சி.அருள் விக்னேஷ் ஆபாச குறுஞ்செய்திகளை அனுப்பியதோடு, மதுபோதையில் அவரது இல்லத்திற்கே சென்று அச்சுறுத்தும் வகையில் தொந்தரவு செய்ததாக வெளிவந்துள்ள செய்திகள் ஒட்டுமொத்த தமிழகத்தையும் பேரதிர்ச்சியிலும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ளது.

பெண்ணுரிமைக்கும், பெண்களின் பாதுகாப்புக்கும் முன்னுரிமை அளிக்கும் தமிழ் மண்ணில், ஒரு மாவட்டத்தின் மிக உயரிய பொறுப்பில் இருக்கும் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கே இந்த நிலை என்றால், சாதாரண எளிய பெண்களின் பாதுகாப்பு எத்தகைய கேள்விக்குறியாகும் என்பதை நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் அஞ்சுகிறது. மக்கள் பிரதிநிதி என்ற பொறுப்பை மறந்து, சட்டம் ஒழுங்கைத் தன் கையில் எடுத்துக்கொண்டு ஒரு பெண்ணின் மாண்புக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட்ட த.வெ.க. எம்.எல்.ஏ.வின் இந்த அநாகரிகப் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இந்திய வரலாற்றிலேயே இல்லாத வகையில், மாவட்ட நிர்வாகத்தை முன்னின்று நடத்தும் பெண் ஆட்சியருக்கே அச்சுறுத்தல் தரும் வகையில் அரங்கேறியுள்ள இந்தச் சம்பவம், தமிழ்நாட்டிற்கு நேர்ந்திருக்கும் பெரும் தலைகுனிவாகும்.

காவல்துறை இந்த விவகாரத்தில் சற்றும் தாமதிக்காமல், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை நிலைநாட்டும் வகையில் உடனடியாக வழக்குப் பதிவு செய்து, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மீது மிகக் கடுமையான சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக மகளிரணி சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம் என்று ஹெலன் டேவிட்சன், (மாநில மகளிர் அணிச் செயலாளர், நாமக்கல் ப. இராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; 'கடந்த ஆட்சியில்' எல்லா துறைகளிலும் ஊழல் மலிந்து தலை விரித்தாடியிருந்ததுன்னு ஒருத்தர் பேசி இருக்காரே! தெரியுமா?

போண்டி : ஆமாய்யா; அந்த ஆட்சியிலேதான் தம் பையனுக்கு திருச்சி தொகுதியில் எம்.பி. சீட் வேணும்ன்னு கேட்டு அடம்பிடிச்சி வாங்கியபோது அந்த 'யோக்ய சிகாமணிக்கு' ஊழல் பத்தி தெரியலியா? சரியான காரியவாதியா அவர்.